உ

சிவமயம்.

வேளூர்

ஆனந்தக்களிப்பு,

&

தில்லைக் கும்மி.



பதிப்பித்தோர்:-

சுயராஜ்யம் பதிப்பகத்தார்

சித்தூர்-கொச்சின்

உ

சிவமயம்.

வேளூர்
ஆனந்தக்களிப்பு
&
தில்லைக் கும்மி.



ஆசிரியர்
M. SP. சண்முகம், M. A.

பதிப்பித்தோர்
சுயராஜ்யம் பதிப்பகத்தார்
சித்தூர்-கோச்சின்.

பதிப்புரை.

பலவருடங்களுக்குமுன் நான் ஒருமுறை திருவேளூர் சென்றிருந்தேன். அங்கு புள்ளிருக்குவேளூர்ப் புராணம் என்ற தருமபுர ஆதீனவெளியீடொன்று எனக்குக் கிடைத்தது. இடைக்காலப் புலவரொருவரால் பாடப்பட்ட அப்புராண நூல் பலநூறு விருத்தப்பாக்களைக் கொண்டதாகும். சிறிய அளவில் மக்களெல்லோரும் பாடும் சந்தப்பாவில் வேளூரைப்பற்றிப் பாடவேண்டுமென்று எனக்கு ஒரு எண்ணம் அப்பொழுது தோன்றவே சில தினங்களில் அவ்வெண்ணத்தை உருவாக்கிவிட்டேன். ஆனால் அன்று எழுதிய ஆனந்தக்களிப்பு பல ஆண்டுகளுக்குப்பின் இன்றுதான் அச்சேற்றப்பட்டுப் பலருடைய பார்வைக்கும் கொண்டுவரப்படுகின்றது. அறிவில் எளியனின் முதல் முயற்சியாதலின் குணம்கண்டு போற்றவேண்டி அறிஞருலகிற் சமர்ப்பிக்கிறேன்.

தில்லைக் கும்மியென்ற சந்தப்பாட்டொன்றும் இவ்வெளியீட்டில் இடம் பெறுகிறது. அப்பாட்டினையும் ஆதரவுடன் ஏற்று ஊக்கமளிக்க அன்பர்களை வேண்டுகின்றேன்.

சித்தூர்-கோச்சின்
23—8—50.

M. SP. சண்முகம். M. A.
ஆசிரியர் " சயராஜ்யம் "

தல வரலாறு.

திருப்புள்ளிருக்குவேளூர் என்ற தலம் சோழநாட்டுத் திருத்தலங்களுள் மிகவும் தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்ததொன்றாகும். திருஞானசம்பந்தமூர்த்தியின் பிறப்பிடமாகிய சீர்காழிக்கு அருகில் உள்ள இத்தலம் நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய இருவராலும் புகழ்ந்து பாடப்பெற்றுள்ளது. இங்கு அம்மை பெயர் **தையல்நாயகி** என்பதாகும். இறைவன் பெயர் **வைத்தியநாதன்.** பொதுமக்கள் புள்ளிருக்கு வேளூரை வைத்தீஸ்வரன் கோயில் என்று வழங்கி வருகின்றனர். இத்தலத்து மண்ணை எடுத்து மக்கள் மருந்தென உட்கொண்டு அனேக வியாதிகள் நீங்கப் பெறுவது இன்றும் கண்கூடாக நடைபெறுகிறது. திருநாவுக்கரசர், "மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்றன்னை," என்று கூறியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. உடற்பிணியேயன்றிப் பிறவிப் பிணியையும் போக்கவல்லான் வைத்தியநாதன் என்பதைக் குறிக்கத் திருஞானசம்பந்தமூர்த்திகள், "செடியாயவுடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்," என்று கூறியுள்ளார். முத்துக்குமாரசுவாமி என்பது இத்தலத்து முருகன் திருப்பெயராகும். மிகவும் வரதரான முத்துக்குமாரப் பெருமானை குமரகுருபர சுவாமிகள் பிள்ளைத்தமிழ் பாடிப் போற்றியுள்ளார். அருணகிரியாரும் இத்தலத்து முருகனைத் துதித்துப் பாடியுள்ளார்.

இக்கோயில் தருமபுர ஆதீனத்தின் கண்காணிப்பில் செவ்வனே போற்றப்பட்டு வருகிறது.

அருஞ்சொல் விளக்கம்:-

பக்கம் 3. பீடுற-பெருமையுற; ஏர்-அழகு; செறு-வயல்;

,, 4. காவிமலர்-நீலோற்பலமலர்; செம்மை-மேன்மை; களங்கம்-குற்றம்; திருவாதவூரர்தருதேன்-திருவாசகம், திருக்கோவையார் (மாணிக்கவாசகர் பாட நடராஜப் பெருமான் எழுதினார் என்பது வரலாறு.) கற்பின் அருமணியை என்றது காரைக்கால் அம்மையை.

,, 5. செரு-போர்; சம்பு-சிவன்.

,, 6. அடிசில்-உணவு.

,, 7. கவின் உற-அழகுமிக்க; பன்னகம்-பாம்பு; கண்ணியன்-மாலைசூடியவன்; உழுவை-புலி. ஆடியநற் றிருக்கூத்தை மறந்துநின்றேன்-சுந்தரருடைய இசையைக் கேட்டு நடராஜப்பெருமான் அசைவற்று நின்றான் என்பது வரலாறு.

,, 9. முருகு-வாசனை; எழில்-அழகு; முன்பன்-வலிமையுடையவன்.

,, 10. ஈண்டி-நெருங்கி; அளி-கருணை.

,, 11. மேவி-வீற்றிருந்து;



உ

சிவமயம்.

வேளூர் ஆனந்தக்களிப்பு.

விநாயகர் துதி

சீர்பெருகும் வேளூர்வாழ் செம்மல் வயித்தியனின்
பேர்பரவிப் பாடிநாம் பீடுறவே—ஏர்வளரும்
கற்பகவி நாயகனைக் கைதொழுவா மென்றுமவர்
நற்பதமே காப்பு நமக்கு.

சீரா ரைங்கரனுரைப் போற்றி—முக்கட்
செல்வனவ னருளால்வே ளூர்மகிமை சாற்றிப்
பேரா ருமாபதியைத் துதிக்க—என்றும்
பேசரிய வாழ்வுடையீர் வாருமெழில்மிக்க

பாரினுயர் புகழ்பெருக வாழும்—செந்நெற்
பயிர்பெருகு சோழநன் னாடதனில் நாளும்
காரிகை யெனமயில்க ளாடும்—தேவ
கானமென வினிமைமிக வேகுயில்கள் பாடும்

தனி நெடும் ஓடை ஒலி உயரும்—இசைக்குத்
தாளமிடக் கொக்கதுகேட் டசையாதங் கயரும்
பனிவாவி சோலைகள் மருங்கில்—பெண்கள்
பாடிமிக ஆனந்த மாயெங்கும் நெருங்கி

விளையாடி வருவார்கள் செந்நீர்—மிக்க
விளைசெறுவி லேமேன்மை கொண்டுதிகழ் மின்னார்
களைகளையும் பொழுதவர்கள் மேலே—வெய்யோன்
கதிர்களுறல் தவிர்த்தோங்கி நிற்கு முயர்வாலே

நல்லாரை யொக்குமுயர் செந்நெல்—அங்கு
    நற்பயிரி னூடோங்கு காவிமலர் தந்நல்
மல்லல்விழிக் கிணையோவென் றிகழ்ந்து—சற்றும்
    மதியாம லெறிவாரே யரிவையர் அகழ்ந்து

கயலிணையா மும்மதுவிழிக் கென்றே—தங்கள்
    காதலர்கள் மொழிகின்ற காரணமென்னென்றே
வயலினுல வும்கயல்கள் தம்மை—நோக்கி
    மாதர்நகை செய்திடுவ ரின்னபலசெம்மை

வளர்நாடன் னூடுகுளிர் நிழலில்—காதல்
    மனைவிதரு சோறுண்டு மகிழுமுயருழவன்
களங்கமகல் மனதோடு திங்கள்—சூடும்
    கற்றையஞ் சடையானி னருள்மிகு பதங்கள்

சென்னிமிசைக் கொண்டுலகில் நாளும்—மாந்தர்
    திருவுபர வாழியவென் றேத்துமெழில் சூழும்
பொன்னிநதி பாயும்வள நாடு—செய்ய
    புகழ்ஞான சம்பந்தர் தோன்றிய நன்னாடு

திருக்கயிலைக் காட்சிதனைப் பூவில்—வீரத்
    திருநாவுக் கரசர்க்குக் காட்டியநற்றுவில்
பெருமைசேர் நாடு உமைபாகன்—தூது
    பேசிடநற் சுந்தரருக் காகவுபர் வாகச்

சென்றிடுசீர் கொண்ட ஆரூரும்—எங்கள்
    திருவாத வூரர்தரு தேனையெழி லாரும்
மன்றிறைவ ரெழுதுபுகழ் பெற்ற—தில்லை
    மாநகரு மிருகண்கள் போற்றிகழ்தலுற்ற

செம்பியர்தன் னூடு பேரன்பால்—பேயாய்த்
    திருக்கயிலை சென்றிடக்கண் ணுதற்கடவுளன்பால்
அம்மையே! எனஅழைக்கப் பெற்ற—கற்பின்
    அருமணியைஈன் றதிரு நாடுபுகழ் பெற்ற

திருமூல ருலகோர்க ளுய்யத்—தெய்வத்
திருமந்தி ரந்தந்த நாடுதனி வெய்ய
செருவிளைத்துத் தனதுபடை சிதைத்த—பகைஞர்
சிரங்கள்தனில் சடைத்தலையொன் றிருக்கமிகப்
பதைத்து]

உளம்வெதும்பி யழற்புகுந்தின் னுவி—போக்கி
உமைபாக னருள்கொண்ட புகழ்ச்சோழர் மேவி
விளங்குபுக ழாரசுபுரி மேன்மை—பூண்ட
மேதினியி லுயர்நாடு சொல்லரிய பான்மை

மிக்கதிரு நாடிதனி லென்றும்—சம்பு
விளங்குபதி எண்ணரிய வுண்டதனு ளென்றும்
மக்கள்பிணி யோட்டுபவர் வாழும்—வேளூர்
மாண்புசொலற் கரிதெனினும் ஒருசிறிது கேளும்.

சிவஞானங் குழைத்தமுலைப் பாலை—வள்ளத்
திமயமகள் கொடுத்திடஉண் டிடுபாலன் மேலை
அவதாரம் செய்தசீர்காழி—தன்னே
டணியுபய காவிரியும் எல்லைகொள வாழி

கந்தபுரி யாம்வேளூர் திகழும்—அங்கு
கந்தனுக்குச் சிறப்புக்கள் மிகப்பலவும் நிகழும்.
இந்தஉல குய்யஅருள் வேந்தன்—உறையும்
இனியதிரு வேளூரை நினைந்திடுநன் மாந்தர்

வல்வினைகள் தீருமதன் நாமம்—கேட்பின்
வாய்த்தபிறப் பிற்செய்த பாதகமெல் லாமும்
நில்லாது போகுமுளத் தன்பால்—ஓர்கால்
நினைந்து பெயர்கூறுபவர்வாழ்க்கை மிகு மின்பால்.

நிறையும்விருப் போடதனைக் காண்போர்—தாங்கள்
நினைத்தவை யெலாம்பெறுவர் திசைபணியு மாண்
போர்]

இறையருள்பெற் றேஉலகில் வாழும்—மேன்மை
யெய்திடுவ ரொருபொழுதங் குறைபவரொன் றனும்

அருந்தவங்க ளெண்ணில்பல செய்த—பேறுற்
றழியாத பேரின்ப மெய்துவரங் கெய்தப்

பெரும்விருப்புக் கொண்டுதினம் வாழும்—மாந்தர்
பேசரிய பேருடைய ராயினிதெங் நாளும்

வாழ்ந்துதிருக் கயிலைமலை சேர்வர்—வேளூர்
வயித்தியனைப் பணிந்திடுநல் லடியவர்கட் கோர்நல்

வாழ்க்கைமனை சமைத்துதவு வோரும்—சாலை
வழிகளிலங் கினியதரு வளர்த்திடுகின் றோரும்

அடியவர்க்கின் னடிசில்தரும் சாலை—யங்கே
அன்போடு நிறுவினரு மயர்ச்சியுற்ற காலை

குடிப்பதற்கின் னீரும்நிழ லிடமும்—நல்கும்
குணமேவு நீர்ப்பந்தல் தன்னொடுநல்மடமும்

சமைத்தினிய தடம்புரிந்திட் டோரும்—பூக்கள்
தழைத்திடுந் தனவனமங் கமைத்தபெரி யோரும்

இமையமகள் மணவாளற் போற்றும்—வேதம்
இனிதுபயின் றோதினரும் எதில்மறை சாற்றும்

தம்பிரான் விரும்பிமிகக் கேட்கும்—தூய
தமிழ்மறையைப் பயிலுமிடம் உயிர்கள்பிணி போக்
கும்]

எம்பிரான் தலத்திலமைத் தோரும்—அதனை
இசைப்பவர்கள் விரும்பியன கொடுத்துதவு வோரும்

ஆகமமுறைப்படி யமைந்த—கோயில்
அறிவுறுமற் பேணும் அன்பரு முயர்ந்த
போகமருள் புண்ணியனைப் போற்றிப்—பாடல்
புனைந்தவரும் வேளூரிற் றெண்டுபல வாற்றி

நின்றவரும் நோய்கவலை யற்றே—தாங்கள்
நினைத்தவரங் கிடைத்திடத் தம்முள்ளமகிழ் வுற்றே
இன்பமுடன் இடம்பொருள்நல் லேவல்—பெற்று
இம்மைநுகர்ந் திந்திரனின் பதவியினிற் சேர்வர்

தேவர் திரு ஆலய மருங்கும்—மற்றும்
செழுமைமிகு நந்தன வனத்தினின் மருங்கும்
தேவர்களும் வந்துபயன் கொள்ளும்—தெய்வச்
சித்தாமிர் தப்பொய்கை நன்னீரி னுள்ளும்

எச்சிலுமிழ் கின்றகொடி யோரும்—இன்னும்
இரண்டுவிடும் பாதகரும் கோழையுமிழ் வோரும்
நச்சரவு சூழ்நரகிற் பன்னாள்—வீழ்ந்து
நைந்திடுவ தோடவர்கள் கூறுவதற் கொண்ணு

வேதனைக ளடைந்திடுவர் கேளும்—கால்கை
விளங்குபுன லாற்கழுவிப் புனிதமொடு நாளும்
வேதபுரி ஈசனையுள் ளன்போ—டேத்தின்
வியனுலகில் மேன்மைபல வெய்திமகிழ்ந் தின்போ(டு)

ஐயர்திருக் கயிலை யடைந்திடுவர்—நேர்மை
யதிந்துலகம் வாழவென நினைந்துபடிந் திடுவோர்
செய்தபிழை பாவங்க ளெல்லாம்—தீர்க்கும்
சித்தாமிர் தத்தீர்த்த மேன்மைகளை யெல்லாம்

நனிகூற லரிதெழில் கொழிக்கும்—தையல்
நாயகியின் சன்னிதி முன்பாய்ப்பவ மொழிக்கும்
தனிமேன்மை கொண்டென்று மோங்கும்—அந்தத்
தரணிபுகழ் தீர்த்தமுயர் கங்கையினு மோங்கும்.

புலியினர்க்கின் னருள்புரிந்து காக்கும்—வேளூர்ப்
புண்ணியனின் புகழுரைத்தற்கெட்டாதெவ் வாக்கும்
கவினுறுவெண் பிறைசூடி னன்காண்—தெய்வக்
கங்கைசடை வைத்தினிய கொன்றைபுனைந் தான்
காண்]
நெற்றியினிற் கண்ணுடைய வன்காண்—தன்னை
நேசிப்ப வர்க்கினிய கருணைபுரி வோன்காண்
செற்றவர் புரங்களெரித் தோன்காண்—முன்னாள்
தேவர்களைக் காக்கவென ஆலமதுண் டோன்காண்
புன்னகை தவழ்முகத் தினன்காண்—தோடு
புனைந்துமிளிர் செவியனுயர் நீலமிடற் றோன்காண்
பன்னகந் திகழ்மார்பி னன்காண்—தொண்டர்
பரவவுபர் முன்னூ லணிந்துதிகழ் வோன்காண்
வெண்ணீற்றன் பொன்மேனி யன்காண்—செங்கண்
விடையேறு வோன்காணெம் முள்ளத்துள் ளோன்
காண்]
கன்னியன்பொன் மலைமாதோர்பாகம்—கொண்ட
கைலைமலை யான்காண்நல் லடியார்களாகம்
நிறைந்தவர்தம் வினைகளறப் போன்காண்—துன்பம்
நீக்கியவர்க் கின்னருள் புரிந்துகாப் போன்காண்
மறைபோற்றும் வள்ளலவ னும்காண்—ஒப்பில்
மானுழுவை யுரியாடை யணிந்துதிகழ் வோன்காண்
தமிழ்தந்த அருளாள னும்காண்—முன்னாள்
தமிழிசையைக் கேட்டுமறைக் கதவுதிறந் தோன்
காண்]
அமிழ்திகழ்ந்து விடமுண்ட வன்காண்—இசைகேட்(டு)
ஆடியநற் றிருக்கூத்தை மறந்துநின் றோன்காண்

போா யிரம்பரவி வானோர்—எத்தும்
பெம்மா னவன்காணிவ் வுலகியங்கு வானோர்
சீரார்பொற் பாதமதைத் தூக்கி—எம்போற்
சிறியோரும் கண்டுய்யக் குமிண்சிரிப்புண் டாக்கி

அம்பலத்துள் நடமாடு வோன்காண்—எம்மை
ஆட்கொள்ளும் ஐயனுயர் வேளூர னும்காண்
நம்பினவர்க் கின்பமருள் வோன்காண்—தையல்
நாயகி சமேதனவன் நம்மிறைவ னும்காண்

பிறவியின்நற் பெரும்பயனைத் தாரும்—என்றப்
பேராள னடிக்கமலம் பணிந்திடுவோம் வாரும்
இறவாத இன்பமருள் நல்லோன்—தன்னை
இன்னுயிர்கள் வாழுவென ஏத்துவம்நா மெல்லாம்

கற்பகவி னையகனைப் பணிவோம்—என்றும்
கடிமலர்ப் பூங்கொன்றைமல ரின்பமுற அணிவோம்
அற்ப உலகப்பொருளை மதியோம்—ஐயன்
அருட்கமலம் பணிவதலதெவவரையும்நாம் துதியோம்

முத்துநவ ரத்னமணி புனைந்து—நல்ல
முருகுவிரி மாலையணிந் தன்புற நினைந்து
தித்திக்கும் பாக்கள்பல பாடி—வேளூர்ச்
செல்வமுத்துக் குமரனையே பணிந்திடுவோம் கூடி

பொன்னுமுயிர்க் குறுதிதரும் நல்ல—மெய்மைப்
பொருளுமருள் குமரனவன் புகழ்முழுதும் சொல்ல
மன்னுலகில் நாவொன்று கொண்ட—மாந்தர்
வன்மைபோ தாதவர்தம் மெழில்காணும் தொண்டர்

இருகண்கள் கொள்ளாத இன்பக்—காட்சி
இதுவாகு மென்றிமைமை மூடார்க ளன்பர்.
ஒருபோது மழியாத இன்பம்—நல்கும்
ஓங்குபுக ழாளனுயர் தையல்தரு முன்பன்

வள்ளிதெய் வானைமணவாளன்—எந்தன்
மனமுழுதுமேகொள்ளை கொண்டபேராளன்
புள்ளிமயி லேறிவரு சீலன்—என்றும்
புகழ்மேவு வேளூரில் வாழுமுயர் லோலன்

மன்னனவ னிணையடிகள் போற்றிச்—செல்வம்
வளர்ந்தோங்க என்றவன்றன் திருப்புகழைச் சாற்றி
என்னையாள் செல்வனவற் பணிவோம்—என்றும்
இன்பமருள் செல்வனெழில் கண்டுமகிழ்ந் திடுவோம்

மங்கலமி குந்துநா டெங்கும்—வானம்
மாறாது பெய்துவள மோங்கிஉயர்வெங்கும்
தங்கிடநல் லருள்புரிய வேண்டி—அம்மை
தையல்நாயகிதனையே வணங்கிடுவோம் ஈண்டி

மந்திரமும் தந்திரமு மாகி—நம்மை
வருத்துபிணி போக்கியருள் வயித்தியன்பா லேகி
அந்தமுத லில்லாத சோதி—எம்மை
ஆட்கொள்ளு வாயென்று தமிழ்மறையை ஓதி

அன்புருக நின்றடி பணிந்தே—ஐயன்
அருள்பெற்றே யுய்ந்திடுவம் அகமகிழ் சிறந்தே
இன்பநடம் புரியுமிறை தன்னோ—டம்மை
இருவரையும்பணிந்துகுருவைத்தொழுதுமுன்னாள்

செங்குட்ட மகன்றிடப்பெற் றுற்ற—செவ்வாய்
திருவடியை வணங்கியொரு தாதைதாள் செற்ற
பொங்குபுகழ்ச் சண்டீசற் போற்றி—இந்தப்
பூவுலகிற் செழும்பயனைத் தருகவெனச் சாற்றி

இன்பமிக வெய்திடுவோம் வாரீர்—பூவில்
எல்லோரும் சைவரென இணைந்தொன்றுசேரீர்.
அன்புசிவ மெனுஞ்சைவம் கேளும்—உண்மை
அளிகொண்டிங் கெளியவரைக் காத்திடுவம் நாளும்

சிவசின்ன மணிந்துநெறி நிற்கும்—தெய்வச்
சிவநேசர் வாழியவென் னாளுமுலகிற்குத்
தவநன்மை செய்துலகில் யாவும்—நன்கு
தழைக்கவென நினைப்பவர்கள் தழைக்கவெழில்
மேவும்
தமிழ்மறையும் தமிழ்மொழியும் வாழி—சைவத்
தனிநெறியும் தமிழர்களும் தழைத்தினிது வாழி
அமிழ்தெனினும் பிறர்க்குமீந் துண்ணும்—சைவ
அன்பர்மிக வாழிபிறர்க் கினிமையே எண்ணும்
அருளாளர் மேன்மேலும் வாழி—இந்த
ஆனந்தக் களிப்பிறைவன் கருணையுற வாழி
திருமகளும் கலைமகளும் வாழி—தெய்வத்
திருமறையை யோதிடுநல் லடியவர்கள் வாழி
கற்பகப் பிள்ளையார் வாழி—முத்துக்
கந்தருடன் வள்ளிதெய் வானைமிக வாழி
வெற்பீன்ற மங்கையுடன் மேவி—வாழும்
வேளூர்வைத்தியனாதன் என்னாளும் வாழி.

திருச்சிற்றம்பலம்

வாழ்க உலகெலாம்.



சிவமயம்

தில்லைக் கும்மி.

சீர்வளர் தில்லைநகர்வாழும்-எங்கள்
செல்வநடராஜனைநாளும்
பார்புகழ் வாழ்வுடை நாம்பாடிக்-கும்மி
பண்புடன் கொட்டிடுவோம் கூடி

வாரும் பயிர்வளமோங்கிடவும்-மழை
மாருது நாடெங்கும் பெய்திடவும்
சீரும் சிறப்பும் வளர்ந்திடவும்-பயிர்
செய்யும் வேளாளர் சிறந்திடவும்

சென்னெறியாம்சைவமோங்கிடவும்-அறம்
செய்தினிதேமக்கள் வாழ்ந்திடவும்
மன்றினில் வாழ்மணியைப்பாடிக்-கும்மி
மாண்புறவேயடிப்போம் கூடி.

செந்தமிழ் நாடதில் நாமுகந்த-நல்ல
செந்நெல் விளைந்திடும் பேர்மிகுந்த
சுந்தரச் சோழநன் னாட்டினிலே-தில்லைத்
தொன்னகரோங்குமிப் பாட்டினிலே.

அப்பதியின்புகழ் சொல்லநம்மா-லிங்கு
ஆகுமோ ஆகாத தாகுமம்மா
செப்பலரும்புகழ் மன்னனவன்-நடம்
செய்திடுகின்றனன் மாந்தரிவண்

கோயிலென்றேயதைக் கூறுவர்காண்-அதன்
கொற்றவன் நம்மைப் புரப்பவன்காண்
தாயினும் மிக்க தயவினன்காண்-ஒரு
தந்தையும் தாயும்இல்லாதவன்காண்

கொன்றை சடையிற் புனைந்தவன்காண் இரு
குண்டலம் காதி லணிந்தவன் காண்
என்றுமடியரைக் காப்பவன்காண் அவன்
எம்மையு மாட்கொண் டருள்பவன் காண்

கங்கை சடையிற் கரந்தவன் காண் முனம்
கண்ணப்ப னெச்சிலை யுண்டவன் காண்
மங்கையோர் பாகமு டையவன் காண் தமிழ்
மாமறை போற்றிடும் வண்மையன் காண்

எங்கும் நிறைந்து விளங்குவோன்காண் தொண்டர்க்
கின்ப மருளும் தகையினன் காண்
செங்கண் விடைதனி லூர்ந்திடுவான் அவன்
சீர் சொலிக்கும்மி யடித்திடு வோம்

புன்னகை செய்யும் முகத்தினன்காண்தேவர்
போற்ற விளங்கிடு மேன்மையன் காண்
இன்னல்களைந்துயிர் காப்பவன்காண் அவன்
ஏழைகளின் துணை யாமவன்காண்

பண்ணின் வடிவம தானவன்காண் சொல்லும்
பாக்கியம் யாவையும் ஈபவன்காண்
கண்ணொரு மூன்றுடை யானவன் சீர்சொல்லிக்
கைகொட்டிக் கும்மியடித்திடுவோம்

பாம்பினை யேயணிந் திட்டவன் காண் ஒரு
பாதிமதிசடைச் சூடினோன்காண்
தேம்பொழிற் றில்லையமர்ந்தவன் காண் அவன்
செம்மை சொலச்செல்வம் நல்குவன்காண்

கண்டவருள்ளம்கவர்ந்துகொள்ளும் தில்லைக்
காட்சிகள் கேட்டிடுவீர் சொல்லுவேன்
விண்டொடும் கோபுரம் நான்குண் டவண் அதில்
மேதகு சிற்பங்கள் மிக்க வுண்டு

நான்கு பெருந்திரு வீதியுண்டு அதில்
நான்மறை யந்தணர் ரில்க ளுண்டு
மான்மறிக்கையனின் கோயிலுள்ளே திரு
மாலும்பள் ளிகொள்ளும் மாண்புமுண்டு

ஆயிரம் கால்பெறு மண்டபம் காண் அதன்
அருகிற் சிவகங்கை யுண்டது காண்
சேய்முருகன் கோயில் தோன்றிடும்காண் அதிற்
சித்திர வேலை சிறந்தன காண்

அம்மையின் கோயிலுள் சென்றிடிலோ சிற்ப
அழகு நிறைந்திடக் கண்டிட லாம்
பொம்மைகள் பேசிடுமோ என்பவர் காணின்
பொம்மையும் பேசிடும் பேசும் என்பார்

மேற்றிசைக் கோபுர வாயில்வழி செல்வன்
மேன்மையைக் காண நுழைந்து சென்றால்
சாற்ற ரியபுகழ் நால்வர்மறை யிந்தத்
தாலத்தில் நம்பிக்குக் காட்டியசீர்ப்

பொல்லாத பிள்ளையார் கண்டிடலாம் அவர்
பொன்னம்ப லத்தில் மறைச்சுவடி
செல்லற மூடியேயுள்ளதெனு முண்மை
தெரிந்திடக் காட்டியே யுப்வுதந்தார்

நாரையூர் நாத னவரைக்கண்டே சற்று
நடந்திடில் நால்வரைக் கண்டிடலாம்
ஊரைநகை செய்தெ ரித்தவன் ஞானியர்க்
குபதேசம் செய்தலும் தோன்றுமங்கே.

அம்மையும் அப்பனும் வாழுகின்ற திரு
ஆலயம் மூலட்டானம் தொழுதே
செம்மையு டன்வலம் வந்திடி லேர்மிகு
திருத்தொண்டர் கூட்டத்தைக் கண்டிடலாம்

பொன் னும்விலேயில் பொருளுமொன் ருயிந்தப்
பூவிற் பேதமின் றிக் கண்டுறைந்து
மன் னும் அருள்பெற்ற தொண்டரை வாழ்த்திப்பொன்
னம்பல மாட்சியைக் கண்டிடுவோம்.

உள்ளும்புறமும் ஒளிபரப்பிக் கண்டோர்
உள்ளம் குளிர்விக்கும் அம்பலத்தில்
பள்ளத்துநீரென அன்பொழுகத் தொண்டர்
பாடிப் பரவச மாகிநிற்பார்.

மங்கல கீதமும் எத்தொலியும் அங்கு
மாருது எப்பொழுதும்ஒலிக்கும்
அங்கணன் அம்பலத்தாடும் திருநடம்
ஆனந்தம் ஆனந்தம் ஆனந்தமாம்.

பொன்ஞெளி வீசிப்பொலிந்திலங்கும் தில்லேப்
பொன்னம்ப லத்துறை மன்னவனின்
இன்னெழில்கண்டு மயங்கி நிற்பார் தொண்டர்
என்று மகல மனமின் றியே.

கண்ணிமை யாதொருமித்த மனத்துடன்
காதல்செய்து நிற்கு மன்பர்க்கெலாம்
எண்ணியன நல்கும் ஐயன் திருக்கரம்
என் றுமஞ்சலென்று தேற்றம்தரும்

தூக்கியபாதம் உலகியக்கும் ஐயன்
துணேமலர்ப்பாதம் வினேயழிக்கும்
ஆக்கியழிக்க வல்லானவன் காப்பவன்
யாவர்க்கும் தேவனும் ஏத்திடுவோம்.

புண்ணியமோங்கிய அந்தணர்கள் என்றும்
பூசை செய்துய்யப் பிறந்தவர்கள்
எண்ணும் மூவாயிரவர்வழி யாம்வழி
இனிது தொடர்ந்தவர் கண்டிடுவீர்

மங்கல மாம்நல் லருச்சனைக் கான
மலர்முதலாயவை ஏந்தினராய்
அங்கவர் வந்திடும் காட்சியைக்காண் அவர்
ஐயனைப் பூசித்து வாழ்பவர்காண்.

பொழுதுபுலர்வதன் முன்புசென்றால் முதற்
பூசையாம் பள்ளிஎழுச்சிக்கவர்
பழுதில் மலர்கொண்டு காத்துநிற்பார் அன்பர்
பக்கமெலாம் சூழ்ந்திசை பொழிவார்.

பள்ளியெழுச்சி தொழுதிடுவோம் ஞானப்
பால்தருவாரதை யுண்டிடுவோம்
அள்ளிப் பருகிட ஆசைகொளுத்தும் பொன்
னம்பலவன் எழில் கண்டிடுவோம்

உருவ மருவ மருவுருவம் என்று
ஓதிய மூன்று நிலையினிலும்
திருவருள்காட்சியளிக்கின்றனன் இறை
தில்லையில் ஈதே ரகசியமாம்

தில்லைரகசியம் கண்டிடுவோம் ரத்னத்
திருவுருவத்தை வணங்கிடுவோம்
எல்லையில் ஆனந்தம் நல்கும்நடராஜன்
இன்னகைகண்டு மகிழ்ந்திடுவோம்.

ஆண்டிரெண்டு தினங்களிலே ஐயன்
ஆனிநல் மார்கழி மாதங்களில்
ஈண்டிப் பல்லாயிரம் மக்கள்தொழவந்(து)
எழுந்தருள்வார் திருவீதி தனில்

தெரிசனம் காணத் திசையெங்கினு முள்ள
தேசத்தவர் திரண்டெய்திடு வார்
அரிதரிதையன் அருள் வரை சொல்ல
அறிந்தன பாடிக் கும்மியடிப்போம்.

கும்மியடித்திடு வோம்இவ்வுலகின்
குறைகளகலக்கும் மியடிப்போம்
நம்மில் எல்லோரும் சமம் என்று சொல்லியின்
நாடு செழிக்கக் கும்மியடிப்போம்.

பணமும் பொருளும் மிகமிகச் சேர்த்திங்கு
பாதுகாத் துப்பயன் கொண்டவரார்?
குணமும் நலமும் பெருக்கியே யம்பலக்
கூத்தனை யேத்திக் கும்மியடிப்போம்

நாடு செழித்திட வேண்டுமென்றும் அன்றே
நாமும் செழித்திட லாகுமம்மா
பாடுபட்டுண்ண நினைந்திடுவோ மென்றும்
பாதக எண்ணம் களைந்திடுவோம்

வாழ்கஉலகெலாம் என்றெண்ணு வோம் அன்றே
வாழ்வுண்டு நந்தமக் கும்உணர்வோம்
தாழ்வொருவர்க் குறில் வாழ்வு நமக்கெனும்
தன்னல எண்ணம் பொசுக்கிடுவோம்

அண்ணலருட் கழல் ஏத்திடுவோம் அவர்
அன்பர்களை மிகப் போற்றிடுவோம்
எண்ணமெலாம் அவற்காக்கிடுவோம் என்றும்
இன்ப உலகில் உலவிடுவோம்

எல்லோரும் சேர நினைந்திடுவோம் ஐயன்
இன்னருட் பாதம் பணிந்திடுவோம்
நல்லவர் நல்லன நன்மைகளே யெங்கும்
நாடோறும் ஓங்கக் கும்மியடிப்போம்

இன்னிசை நாதம் எழுப்பிடுவோம் உயர்(வு)
என்றென்றும் வாழக் கும்மியடிப்போம்
பொன்னம்பலவன் புகழ்மண மிந்தப்
புவி யெங்கும் வீசக் கும்மியடிப்போம்!

சுயராஜ்யம் அச்சகத்தாரின் 2-ாவது வெளியீடு



Home of

Beautiful Printing

SUYARAJYAM PRESS,

CHITTUR :: :: COCHIN